02.09.2024

அ.வ.எண். 128/2018

வாசா.2- மனோகரன்

1, 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 10ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு 59 வயதாகிறது. நான் நூல்வியாபாரம் செய்து வருகிறேன். அதன்மூலம் எனக்கு வாதி ராமசாமி 30 ஆண்டுகளாக பழக்கம். அவர் டெக்ஸ்டைல்ஸ் தொழில் செய்துவருகிறார். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 451 காலையில் மொத்தம் 6.25 ஏக்கர் . வாதி ராமசாமிக்கு பாத்தியப்பட்ட மூலஆவணங்கள் நான் பார்த்துள்ளேனா என்றால் அதை பார்த்துள்ளேன் படித்துப்பார்க்கவில்லை. வாதி ராமசாமி 2002 ஆண்டு கிரையம் பெற்றார். என்ன தேதி ,மாதம் என்று தெரியாது. 451 முதல் 451/6 உட்பிரிவுகளில் தனித்தனியாக ஒவ்வொரு உட்பிரிவுகளில் தனித்தனியாக எவ்வளவு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. வாதியின் கிரைய பத்திரத்தின்படி பாத்தியம் என்று சொல்கிறேன். எந்த பத்திரத்தின் அடிப்படையில் எவ்வளவு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. 451 , 452 காலைக்களுக்குள் வருவாய்துறை ஆவணங்களை நான் பார்த்ததில்லை. 451ல் கூட்டுப்பட்டாவா தனிப்பட்டாவா என்று எனக்கு தெரியாது. 452/7, 8 கூட்டுப்பட்டாவா , தனிப்பட்டாவா என்று எனக்கு தெரியாது. 452/7 காலை எப்பொது எதைப்பொறுத்து உட்பிரிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. 452 காலையில் வாதி ராமசாமிக்கு எவ்வளவு பூமி பாத்தியம் என்று எனக்கு தெரியாது. 451 காலைக்கும் 452 காலைக்கும் தடம் எங்கு ஆரம்பித்து எங்கு முடிகிறது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகளை எனக்கு தெரியும். கணேசகவுண்டரின் அப்பா பெயர் தெரியாது. பிரதிவாதிகளின் அப்பா பெயர் தெரியாது. ஆட்களை மட்டும்தான் தெரியும். பிரதிவாதிகளுக்கு 451 , 452

காலையில் எவ்வளவு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. பாலசுப்பிரமணியம் தனது மகனுக்கு 451 காலையில் எவ்வளவு பூமி எழுதிவைத்தார் என்று எனக்கு தெரியாது. வாதி பூமி சம்மந்தமாக பிரச்சனை இருப்பதாக 10, 15 வருடங்களாக சொல்லிவருகிறார் என்றால் ஆமாம். பட்டாவில் உள்ள அளவை விட அனுபவத்தில் அளவு குறைவாகஉள்ளது என்று சொல்லிவருகிறார் என்றால் ஆமாம். அது சம்மந்தமாக வருவாய்துறையில் நடவடிக்கை எடுத்து வருகிறாரா என்றால் ஆமாம். அது என்ன நடவடிக்கை என்று தெரியாது. வாதி ராமசாமி பூமி ஒரேஇடமாக உள்ளது . அவருடைய பூமிவழியாகத்தான் பிரதிவாதிக்கு தடம் என்றால் சரியல்ல. பிரதிவாதி பூமியை சுற்றி கம்பிவேலி அமைத்துள்ளார் என்பது பொய் என்றால் சரியல்ல. வழக்கு பற்றியும் சொத்துப்பற்றியும் வழக்கு ஆவணங்களைபற்றியும் வருவாய்துறை ஆவணங்களை பற்றியும் தாவா சொத்தை பார்க்காமல் வாதி கேட்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

3 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு வேறுஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/மனோகரன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur